# ஆரம்பநிலை மாணவர்களுக்கான தகவல் குறிப்பு:

இது உங்களுக்கு ஆங்கிலத்தில் கிடைக்கவிருக்கும் ஆரம்பப் பாடசாலையில் பதிவுசெய்வதற்கான தொலைபேசி அழைப்பின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்:

இது இந்த செப்டெம்பர் மாதத்தில் தரம் (பிள்ளைக்குரியது)க்கு செல்லும் உங்களுடைய பிள்ளைக்காக ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையில் இருந்து வரும் மிகவும் முக்கியமானதொரு செய்தியாகும். *(உங்களுடைய பிள்ளை ஒவ்வொருவருக்கும் ஒரு தொலைபேசி அழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். அவர்கள் கற்கும் வகுப்புத் தரத்தின் மூலம் அந்த அழைப்புகள் அடையாளம் காணப்படும்.)*

ஆரம்பநிலைப் பாடசாலைகள் வாரத்தில் ஐந்து நாட்களும் மேம்படுத்தப்பட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளையுடன் முழு நேரமாக ஒரு குழு அமைப்பில் மீண்டும் ஆரம்பிக்குமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

COVID-19 தொற்று ஏற்படும் ஆபத்து அதிகமாக உள்ளதென ரொறன்ரோ பொதுச் சுகாதாரத் தரவுகள் இனம்காணும், இந்த அமைப்புமுறை முழுவதும் உள்ள பாடசாலைகளில், அங்குள்ள சமூக வளங்களில் கவனம் செலுத்துவதுடன் உடல் ரீதியாக விலகியிருத்தல் தொடர்பான ரொறன்ரோ பொதுச் சுகாதாரப் பிரிவினரின் பரிந்துரைப்புகளின் அடிப்படையில், வகுப்பிலிருக்கும் மாணவர்களின் அளவுகளும் இயன்றவரை குறைக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு உத்தியை TDSB உருவாக்கியுள்ளது. மேலதிக வளங்கள் தேவைப்படக்கூடிய பாடசாலைகளைக் கண்டறிவதற்காக, எமது பணியாளர்கள் ரொறன்ரோ பொதுச் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

வகுப்பறையில் கற்பதற்காக செப்டெம்பர் மாதத்தில் உங்களுடைய பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லையென நீங்கள் தெரிவுசெய்தால், TDSB இன் தொலைதூரக் கற்கைக்கான மெய்நிகர் பாடசாலை ஊடாக, உங்களுடைய பிள்ளைக்கு ஒரு முழுமையான தொலைதூரக் கல்வி முறையொன்று வீட்டில் கிடைக்கப்பெறும். பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட தனிப்பட்ட மாதிரி ஒன்றை வழங்குவதற்குப் போதிய ஆதாரவளங்கள் கிடைக்காததால், தொலைதூரக் கற்கை முறை பொதுவானதொரு மெய்நிகர் பாடசாலை ஊடாக வழங்கப்படும்.

செப்டெம்பர் மாதத்திற்கான வகுப்புப் பட்டியல்களை உருவாக்கும் தேவை உங்களுடைய பாடசாலைக்கு இருக்கின்றது, எனவே உங்களுடைய பிள்ளையை இந்த நேரத்தில் நேரில் கற்பதற்கு (இதன் அர்த்தம் பாடசாலையில் என்பதாகும்) அல்லது தொலைதூரக் கற்கைக்கு (இதன் அர்த்தம் மெய்நிகர் பாடசாலை என்பதாகும்) பதிவுசெய்யுமாறு உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

1) உங்களுடைய பிள்ளை செப்டெம்பர் மாதத்தில் எவ்வாறு பாடசாலைக்கு மீண்டும் திரும்புவார்:

   “எனது பிள்ளை நேரில் சமூகமளிப்பார்” என்பதற்கு 1 ஐ அழுத்துங்கள்

“எனது பிள்ளை தொலைதூரக் கற்கைக்காக மெய்நிகர் பாடசாலைக்குச் சமூகமளிப்பார்” என்பதற்கு 2 ஐ அழுத்துங்கள்

உங்கள் பதிவுக்கு நன்றி. அண்மித்த தகவல்களையும் அடுத்த படிமுறைகள் பற்றிய தகவல்களையும் பெறுவதற்குத் தயவுசெய்து எங்களுடைய www.tdsb.on.ca என்ற வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.